Date of Competition
Video Recording
29.12.2020
30.12.2020

Jan 12 NYD

# தேசிய இளைஞர் விழா 2021

## National Youth Festival - 2021

## (மெய்நிகர் நடைமுறை – Virtual / Hybrid Mode)

இந்திய அரசு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆண்டுதோறும் இளைஞர்களின் தனித்திறனை மேம்படுத்துவதற்காக சுவாமி விவேகானந்தர் அவர்களின் பிறந்த நாளை இளைஞர் தேசிய இளைஞர் விழாவாக கொண்டாடி வருகின்றனர். இவ்வாண்டு கோவிட்–19 தொற்று காரணமாக இவ்விழாவினை மெய்நிகர் முறையில் (Virtual/ Hybrid Mode) நடத்துவது என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

அதன் பொருட்டு இந்திய அரசு வழிகாட்டுதளின் படி தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாடு மேம்பாட்டுத் துறை, கோவிட்–19 சுகாதார விதி முறைகளுக்குட்பட்டு மாவட்ட அளவிலானப் போட்டிகளை 29 மற்றும் 30 டிசம்பர் 2020 ஆகிய தேதிகளிலும் மாநில அளவிலான போட்டிகளை 5 முதல் 8 ஜனவரி 2021 வரையும் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை வரும் 12 முதல் 19 ஜனவரி 2021 வரை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையில் ஒவ்வொரு போட்டிக்கான நடுவர்களை நியமித்து மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளது. மாவட்ட அளவில் வெற்றிபெறும் போட்டியாளர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்வார்கள். மாநில அளவில் வெற்றி பெறுவோர் தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வார்கள். போட்டிக்கான விதிமுறைகள், போட்டிக்கான நேரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## போட்டிக்கான விதிமுறைகள்/Competion Guidelines

தமிழக இளைஞர்கள் தங்களின் தனித்திறன்களை வெளிப்படுத்த தேசிய அளவிளான போட்டிகள்.

**தகுதி:**

15 முதல் (31.12.2020 அன்றய தேதியில்) 29 வயது நிரம்பிய பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவர் அல்லாதவர்கள் அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

**போட்டிகள்:**

- மொத்தப் போட்டிகள் 18
- தனி நபர் போட்டிகள் 11
- குழுப் போட்டிகள் 07